[12th August 1960

(ஆ) மத்திய அரசாங்கம் இவ்விஷயமாய் சட்டம் செய்வது பற்றி நம் அரசாங்கத்தை ஏதேனும் கேட்டிருக்கிறார்களா? அப்படியானால் அதன் விபரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir. In 1959 the Minister for Industries desired that a Bill be prepared to regulate the conditions of employment in Motor Transport Industry. But Government of India stated that a Central Bill was under contemplation.

(b) A draft Bill of the Government of India has been referred to this Government for comments and it is under consideration.

SRI A. VEDARATHNAM : இந்திய அரசாங்கம் இதற்காகச் சட்டம் செய்தால் அது நம்முடைய மாநிலத்திற்கும் பொருந்துமா அல்லது அதை அனுசரித்து வேறு சட்டம் இங்கே நிறைவேற்றப்பட வேண்டுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : மத்திய சர்க்கார் நிறைவேற்றினால் அது அகில இந்தியாவுக்கும் பொருந்தும்.

Pisciculture

* 138 Q.—SRI P. G. MANICKAM : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ல் சென்னை ராஜ்யத்தில் எத்தனை குளங்களிலும், விவசாய நிலத்திலிருக்கும் கிணறுகளிலும் மீன் வளர்ப்புத திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கின்றது?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Sir, during the year 1959–60 fish culture operations were undertaken by the Fisheries Department in 4,188 tanks and in 160 irrigation wells in paddy fields.

SRI P. G. MANICKAM : ஸார், மீன் வளர்ப்புத் திட்டமானது ஒரு முக்கியமான திட்டமாகும். ஆகவே, இத்திட்டத்தில் என்னென்ன காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைப் பற்றி ஒரு ஜாபிதாவைத் தயாரித்து மெம்பர்களுக்கு வழங்குவது மிகவும் நல்லது. அந்த ஜாபிதாவில் எத்தனை மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டன, எத்தனை நீர்த் தேக்கங்களில் வளர்க்கப்பட்டு வருகின்றன, இன்னும் எத்தனை குளங்களில் வளர்க்கத் திட்டம் இருக்கின்றன என்ற புள்ளி விவரங்கள் அடங்கிய . . . .

MR. SPEAKER : The hon. Member is making a suggestion. He can only put a question.

SRI P. G. MANICKAM: ஒரு ஜாபிதாவைத் தயாரித்துக் கொடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : 1959-60-ல் 4,188 குளங்களில் 23.72 லட்சம் மீன் குஞ்சுகளும் 160 குளங்களில் 11,570 மீன் குஞ்சுகளும் விடப்பட்டிருக்கின்றன.